Released by Maran’s Dog ,Toronto, Canada

ஸ்ரீ

தேவப்பெருமாள் திருவடிகளே சரணம்.

வைசாகோத்ஸவ வித்வத் ஸபையின்

விசேஷ நிவேதநம்.

* * *

Released by Maran’s Dog ,Toronto, Canada

Released by Maran’s Dog ,Toronto, Canada

ஸ்ரீ காஞ்சி ஸன்னிதிவீதியிலுள்ள ஸ்ரீவானமாமடத்தில் 5-6-39 திங்கட்கிழமை பகல் 2-30 மணிக்கு ஸ்ரீவைஷ்ணவ வித்வத்ஸபை நடைபெறுமென்று பிரசுரம் செய்திருந்தபடி பல வித்வான்கள் வந்து கூடி ஸபை ஆரம்பமாகும் ஸமயத்தில் ஸ்ரீ காஞ்சி. அஹோபிலமடம் ஸ்ரீகார்யம். பண்டித. முக்கூர் உ. வே. ராஜகோபாலாசாரியர் ஸ்வாமியும், பண்டித உ. வே. கீழாத்தூர். கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமியும் சில துணைவர்களைக் கூட்டிக் கொண்டு அவ்விடத்திற்கு வந்து “இருகலைச் சமரசம் வாழ்க” என மகுடம் புனைந்தவோர் பத்திரிகையைத் தந்தார்கள்.

உத்தேசித்திருந்த ஸபை கிரமமாக ஆரம்பமாயிற்று. க்ராஸநாதிபதியை வரித்தபின் ஸ்ரீமதித்யாதி. உ. வே. திரு ணி அப்பன் ஸ்வாமி பக்தியைப்பற்றி உபந்யஸித்தருளத் தொடங்கினர். அப்போது, முன்னம் குறிக்கப்பட்ட இரண்டு ஸ்வாமிகள் ‘இந்தஸபையில் இருகலை ஸமரஸவிஷயம் பேசப்படுமென்பதாகப் பத்திரிகைகளில் பார்த்து நாங்கள் அதற்காகவே இவ்விடம் வந்திருக்கிறோம்; இப்போது பக்திவிஷயம் உபந்யஸிக்க ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது; அந்த ஸமரஸவிஷயம் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?’ என்று கேட்டார்கள்.

அதற்கு சபையின் காரியதர்சியான ஸ்ரீ. உ. வே. அண்ணா ஸ்வாமியால் அளிக்கப்பட்ட பதிலாவது— “நமது ஸபையின் விளம்பரப் பத்திரிகையில் ‘இருகலை’ என்கிற சொல்லும் கிடையாது, ‘ஸமரஸத்தைப்பற்றி இங்கே பேசப்படும்’ என்கிற பேச்சும் கிடையாது; ஒருமதத்தையும் இழிவாகக் கூறாமல் ஸகல

ஸ்ரீவைஷ்ணவர்களும் மனமொத்து அநுபவிக்கக்கூடிய தத்வஹித புருஷார்த்த விஷயங்களை உபயகலை வித்வான்களையுங் கொண்டு உபந்யஸிக்கச் செய்வதற்காகவே இந்த ஸபை அமைந்திருக்கின்றது· பத்ரிகைகளிலும் இவ்வளவுதான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் (உபயகலையார்க்கும்) ஸமரஸம் ஏற்படவேணுமென்று சென்னை ஹைகோர்டு ஜட்ஜ் உ. வே. K. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமிகள் நேற்று சித்திரை மாதத்தில் ஸ்ரீபெரும்பூதூர் காலேஜில் பிரசங்கம்செய்தார். மதுரை ஸபை முதலான இடங்களிலும் இதைப்பற்றித் தாம் அடிக்கடி பிரசங்கம் செய்து வருவதாகவும் கூறினார். கோயம்புத்தூர். திவான்பஹதூர் அட்வகேட் உ. வே. ஸி. வீ. வெங்கடரமணையங்கார் ஸ்வாமிகளுக்கும் அந்த குதூஹலம் மிகமிகவுள்ளது. இங்ஙனம் பெரியோர்களுக்கு இருக்கின்ற குதூஹலம் இப்போது ஸபையின் விளம்பரத்தில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றதேயன்றி வேறில்லை. விசால புத்தியுள்ளவர்களான பெரியோர்கள் கோருகின்ற உபயகலா ஸமரஸ விஷயம் இப்படி ஏகாந்தமாக நம் போன்றவர்களால் நிர்வஹிக்கக்கூடியதுமன்று. ஆனாலும் இந்த ஸபைக்கு இது முக்கியமான லக்ஷியம் என்று பிரசுரம் செய்திருப்பதானது மேற்கூறிய பெரியோரின் நியமனத்தை யநுஸரித்தே, அந்த ஸமரஸத்திற்குரிய முயற்சிகளை விதிவாய்க்கும்போது அப்பெரியார்களே செய்வார்கள். [illegible]போது நாம் எவ்விதமான வேற்றுமையையும் பாராட்டாமல் [illegible]ழகிய உபந்யாஸங்களைச் செய்யவே ஸபை சேர்த்திருக்கிறோம் [illegible]ன்பதாம்.

அன்றியும், அவர்கள் வெளியிட்ட [illegible]ருகலைச் சமரஸம் வாழ்க" என்ற காகிதத்தில் கண்ட வார்[illegible]கள் முழுவதும் அநாமதேயர்களால் அர்த்தமில்லாமல் எழுதப்[illegible]வை என்றும் 'இதை நான் எழுதினேன்' என்று ஒரு விவேக[illegible]ரே நின்று சொல்லி ஸமர்த்திப்பாராகில் அதுவன்றோ [illegible]மானது என்றும் சொல்லி, அறிவுடையார் அகமகிழும்படியா[illegible] பல பிரமாணிக விஷயங்களையும் அண்ணா ஸ்வாமி எடுத்துரைத்தார். அவற்றை அப்போது ஸபைக்கு வந்திருந்தவர்கள் அறிந்து உவந்தது போல் மற்றுள்ளாரனைவரும் அறிந்து மகிழுமாறு இது வெளியிடப்படுகிறது.

1. நமது நிகமாந்த மஹாதேசிகன் திருவடியில் அண்ணா ஸ்வாமி மஹத்தான அபசாரத்தைப் பெற்றவர் என்பது முதல் தூஷணை. இப்படி மிகவும் பொய்யாகப் பிரசாரம் செய்தே சிலர் ஜீவிக்க வேண்டியிருப்பதால், ஒன்றுமறியாத பாமரர்களிடம் ஏகாந்தமாகப் பேசி ஏமாத்திவிடலாமேயல்லாது ஸதஸ்ஸில் நின்று நிரூபிக்கக்கூடியதன்றிது ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அருளியுள்ள க்ரந்தங்களுக்கெல்லாம் அறிஞர் மெச்சும்படியான வியாக்கியானங்களையே அநவரதம் எழுதி வெளியிட்டு வருபவரும் இப்படி இவரேழுதுகிற வியாக்கியானங்களே தேசிக பக்தர்களுக்கு உபஜீவ்யங்கள் என்று உ. வே. வி வி ஸ்வாமியால் வேதாந்த தீபிகையிலும், உ. வே. திருவரங்கம் D T. தாதாசாரியர்ஸ்வாமி (M. O. L.) யால் உத்பாத பத்ரிகையிலும், உ. வே. திருச்சி ஏ. வி. கோபாலாசாரியர் ஸ்வாமியால் ஸம்ரக்ஷிணீ பத்ரிகையிலும் * யதார்ஹம் கேசவே வ்ருத்திம் அவசா: ப்ரதிபேதிரே * என்ற கணக்கிலே கொண்டாடிப்புகழப் பெற்றவருமான அண்ணா ஸ்வாமியை தேசிகத்வேஷியென்று சிலர் பிரசாரம் செய்து வராவிட்டால் அவர்களுக்கு ஜீவனம் நடக்கமாட்டாதாகையால் அப்படிப்பட்டவர்கள் தங்கள் ஜீவனத்திற்காக அவசியம் அப்படியே சாச்வதமாக ப்ரசாரம் செய்துவரவேண்டியது.

மேலே குறித்த. வி வி. ஸ்வாமி முதலானவர்கள் அண்ணாஸ்வாமி யெழுதிவரும் ஸ்ரீ தேசிகஸூக்தி வியாக்யானங்களை வேதாந்ததீபிகை முதலியவற்றில் புகழ்ந்திருப்பது வாஸ்தவமா அன்றா என்பதை உண்மையாகக் கண்டறியவல்லமஹான்களுக்கு இங்கு அதிகமாகத்தெரிவிக்கவேண்டியது ஒன்றுமில்லை. அண்ணாஸ்வாமி பெயரால் சுமார் 150 கிரந்தங்கள் இதுவரை வெளிவந்திருக்கின்றன. அவற்றில் எந்த க்ரந்தத்தில் என்ன தேசிகதூஷணையுள்ளது? காட்டுங்கள்—என்றால் வாய்திறக்க மாட்டாதவர்கள் சில பாமரர்களைத்தானே வஞ்சிக்கலாம். அண்ணாவின் பெயர் இல்லாத சுவடியிலிருந்து "சப்த சாஸ்த்ரபோத லேச ஹீந வேங்கடேசவாக்" இத்யாதி சில ச்லோகங்களை யெடுத்துக் காட்டிக்காட்டி இவற்றையே நித்யாநுஸந்தானமும் செய்து கொண்டும் செய்வித்துக்கொண்டுமிருக்கிறவர்களுக்கு அதுவே போது போக்காக இருக்கட்டும்.

“ஸ்ரீ தேசிகதிவ்யஸூக்திகளின் உண்மையான பொருள்களை அண்ணா வியாக்கியானித்து வெளியிட்டு விடுகிறாரே, நம்முடைய அபார்த்தங்கள் அடியற்றுப் போகிறதே!” என்கிற திருவயிற்றெரிச்சலினால் இவர்கள் தப்புப்பிரசாரங்களைச் செய்யச் செய்ய. மேன்மேலும் தேசிக ஸ்ரீஸூக்திகளுக்கு அண்ணா அற்புதமான வியாக்கியானங்களை யெழுதவும், அவற்றை உலகம் கண்டு களிக்கவும் நேர்கின்றதேயன்றி வேறில்லை. மந்தரையின் பொறாமைபோல இவர்களின் பொறாமையும் லோகக்ஷேமத்தையே மேன்மேலும் விளைவிக்கின்றதென்று விவேகிகள் உகந்தேயிருப்பார்கள்.

2. பரமசாதுக்களான ஸ்ரீ தேசிக சிஷ்யர்களிடத்தில் அபசாரப்படுவதாக இரண்டாவது தூஷணம். உண்மையான தேசிக சிஷ்யர்கள் யார் என்பது நிர்ணயிக்கப்படவேண்டும். தேசிகனுடைய திவ்யஸூக்திகளுக்கு நேர்விருத்தமாக நடந்துவருபவர்கள் தேசிகசிஷ்யராவார்களோ? மூக்குக்கு மேலேயே வளைத்துவிட்டால் தேசிக பக்தர்களென்றும், மூக்குக்குக் கீழே இழுத்துவிட்டால் தேசிகத்வேஷிகளென்றும் இவ்வளவேயன்றோ இவர்கள் பேசக்கற்றது. இது நேர் விபரீதமான க்ரஹணமென்பதை நன்கு நிரூபிப்போம்.

ஜகத் ப்ரஸித்தரான புரிசை ஸ்ரீ ரங்காசாரியர்ஸ்வாமி சாத்திக்கொண்டிருந்த மாதிரியான திருமண்காப்புத்தான் ஸ்வாமி தேசிகனுட்பட ஸகல பூர்வா [illegible] களும் சாத்திக்கொண்டிருந்ததாக சித் [illegible] தீபிகை பரிஷ்காரமாக வெ [illegible]. அப்படிப்பட்ட திருமண்காப்பைத்தள்ளி, “வடமர்களான அய்யர்களுடைய கீறுநாமம்” என்று வேதாந்ததீபிகையே நிரூபித்திருக்கும் ஒரு திருமணை தாங்கள் இட்டுக்கொள்வதோடு நில்லாமல் தங்கள் பலாத்காரத்தாலே ஆக்ரமிக்கப்பட்ட சில தேசிக பிம்பங்களிலும் சாத்தி, அந்தத் திருமணிலே வீணான ஒரு அபிநிவேசத்தையும், பூர்வாசார்ய பரம்பராபரிக்ருஹீதமான ருஜுவான திருமண்காப்பிலே த்வேஷத்தையும் கொண்டு, இப்படி த்வேஷப்படுகிறவர்கள் எவரோ அவர்களே தேசிகபக்தர்கள் என்றும், விபவதசையில் தேசிகன் அணிந்துகொண்டிருந்த திருமண்காப்பை அணியுமவர்கள் தேசிகத்வேஷிகளென்றும் வரம்பு இட்டுக்கொண்டவர்களைத் தெளிவிக்க யாரால்முடியும்?

3 விதவாவபந வித்வம்ஸநம் என்கிற க்ரந்தத்தை அண்ணா 10, 12 வருஷங்களுக்கு முன்பு வெளியிட்டிருப்பதைப்பற்றி மூன்றாவது தூஷணம் கூறப்படுகிறது. அண்ணா எப்போதும் ஸ்வபக்ஷஸ்தாபனத்திற்காக க்ரந்தங்கள் எழுதுகிறவரேயன்றி பரபக்ஷ நிராஸத்திற்காக அவர்க்கு ஸ்வத: ப்ரவ்ருத்தி கிடையாதென்பது அவருடைய க்ரந்தங்களை வரிசையாக வாசித்தவர்களுக்குத் தெரியும். தென்கலை விதந்துஸ்த்ரீகள் வபநம் செய்வித்துக் கொள்ளாதது தப்பு என்று தூஷித்தெழுதிய ஒரு சாஸ்திரிக்கு பதிலாக எழுதப்பட்ட வித்வம்ஸந க்ரந்தத்தில் இவர்கள் என்ன பிழை காண முடியும்? “வடகலை விதந்துஸ்த்ரீகளின் வபநாசாரத்தை நாம் தூஷிக்கவரவில்லை” என்றும் அதிலேயே அண்ணா பலகால் எழுதியிருக்கிறார். ஸ்வபக்ஷஸ்தாபநத்தை அண்ணா செய்துகொள்ளுகிற விதமாக இவர்களும் ஸ்வபக்ஷஸ்தாபநம் செய்துகொள்ள சக்தியற்றவர்களாக இருப்பதனாலே பொறாமையோடு உபாலம்பம் செய்யப் புறப்படுகிறார்கள். க்ரந்தத்திற்கு பதில்க்ரந்தம் அழகாக எழுதுவதன்றோ பண்டித லக்ஷணம். தென்கலையார்களைப்பற்றி இவர்கள் தூஷித்துக்கொண்டேயிருக்கவேண்டுமென்றும், அதற்கு யாரும் மறுப்புரைக்கக் கிளம்பவே கூடாதென்றும், அங்ஙனம் கிளம்புகிறவர்களை தேசிகத்ரோஹிகளென்று நிந்தித்துக்கொண்டே ஜீவிக்கவேணுமென்றும் இவர்களுடைய கனவு.

4. “உத்தராவஸ்தை” என்று ஒருவாசகம் எழுதியுள்ளார்கள் ஸ்வாமி தேசிகனுக்கே பூர்வாவஸ்தை, உத்தராவஸ்தை என்று கல்பிக்கிற இவர்கள் அண்ணாவுக்குக் கல்பிப்பதில் என்ன ஆச்சரியம். தேசிகனுக்கு இரண்டு அவஸ்தைகளை இவர்கள் கல்பித்ததாகத் தெரியவில்லையே! என்று சிலர் எண்ணக்கூடும். கேளுங்கள்: பிள்ளை லோகாசார்யர் “சீரொன்றுதூப்புல்” என்கிற தனியனை தேசிகனுக்கு ஸாதித்ததாகக் கூறுகிற இவர்கள் பிள்ளைலோகாசார்யரோடு ஸமாஸமாகவே தேசிகன் இருந்ததாக

இசைகிறார்கள். ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸா தத்தில்பக்தியைக் காட்டி
ருடைய ஸ்ரீஸூக்திகளை யெல்லா ராதிகள் என்றே நம்தேசி
கண்டித்து விட்டார் என்கிற இவல்பஸம்ப்ரயோதயத்தில் "யதி
தேசிகன் விரஸப்பட்டு எதிராம்ருத்யாதிச்லோகங்களினால் அது
தையை அங்கீகரிக்கிறார்கள். ஸங்கெவலு — உத்தாய நஞ்ஜய — மிஷா நம
கல்பனை ப்பவர்கள் இஃதுதெ இத்யாதி பாஸ்ஸஹஸ்ர தேசிக
அபார்த்தம் கூறுகின்றவர்களை ப்ரச்சந்ந

5. தேசி ன்றுதானே தீர்மானிக்கவேண்டியிருக்கிறது.
நெற்றியில் தே சிகன் வடகலைகுருவென்பதற்கு இன்னது
அபிப்ராயமாக சொல்லி இவர்கள் நிரூபிப்பார்களேயானால் இவர்
தம்நெற்றியி யாவோம். விஷயங்களுக்குத்தான் இவர்கள் பதி
ஸந்த்யாவ ற வழக்கமேயில்லையே. வையவேண்டியதுதானே இவர்
அணிய விரதம். தாராளமாக வையட்டும்.
எல்லா

ராமாநுஜ தாயா பாத்திரத்தி தேசிகனுக்கும்
[illegible] பந்தங்கூட கிடையா
தென்பது சிலாசாஸன மாக் ருக்கிறது, அந்தத் தனியன்
ஏற்பட்ட நாள் முதல் வ லும் செலாமணியாகாமல், தேசிக
னது திருவவத தில் ஸ தாராம் தலைகாட்ட மாட்டாமல்
[illegible] என்று முழக்கிட்டும் முடிந்தபிறகு கனவி
லும் கடைத்தேறமாட்டாத நப்பாசைகள் எதுக்கு?

9. தென்கலையார்கள் போலீஸாரை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு காரியங்கள் ஸாதித்துவிடுவதாகக் காட்டப்படுகிறது. மநுஷ்யபலமோ தேஹபலமோ த்ரவ்யபலமோ அம்பலமோ எல்லாம் இவர்களுடையதே. அதிகாரிகள் யாவரும் இவர்களிட்டது சட்டம். அப்படியிருந்தும் * க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ண நாதாச்ச பாண்டவா. * என்றகணக்கிலேயிருந்து ஆழ்வார்பரிகரங்கள் எங்கும் வெற்றிபெற்று வருவது * அவன் கடைத்தலையிருந்து வாழும் சோம்பரானது பற்றியே.

10. துக்கடா புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதாக எழுதப்படுகிறது. இதைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறோம். துக்கடா புத்தகமென்றால் என்ன? அதிக ஏடுகள் இல்லாமல்

விசேஷ நிவேதநம்

மெட்டு ஏடுகளிலேயே முடிந்துவிடுகிற புத்தகம் என்று அர்த்
மா? மஹான்கள் பெரிய பெரிய புத்தகங்களும் எழுதுவார்
ள். சிறிய புத்தகங்களும் எழுதுவார்கள். தேசிகன் சத
ஷணி, தாத்பர்ய சந்திரிகை முதலானபெரிய க்ரந்தங்கள் ஐந்
று அல்லது பத்தெட்டு அருளிச்செய்தார். மற்றவை பத்து
டுகளிலும் எட்டேடுகளிலும் நாலேடுகளிலும் அரைப்பக்கத்தி
ம் கால்பக்கத்திலும் முடிகின்றவையாய் இருக்கின்றன. அவற்
றையும் துக்கடாபுத்தகமென்றே இவர்கள் சொல்லுவார்கள்
பாலும். அண்ணஸ்வாமியின் க்ரந்தங்கள் பெரும்பாலும்
அச்சேறியிருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஏடுகளிலும் நூற்றுக்
கணக்கான ஏடுகளிலும் பல பல புத்தகங்களை இயற்றி வெளி
யிட்டிருக்கிறார் என்பது ப்ரத்யக்ஷ ஸித்தம். ஆவச்யகதைக்கு
ஏற்ப சில புத்தகங்கள் பத்தெட்டு ஏடுகளிலும் முடிந்திருக்கும்
அதனாலேயே அவற்றை துக்கடாபுத்தகமென்பதானால், வைராக்ய
பஞ்சகம், ந்யாஸதசகம், தேவராஜாஷ்டகம், அஷ்டச்லோகி
முதலிய திவ்யஸூக்திகளையும் இவர்கள் தூஷித்தவர்களேயாவர்.
விஷயலாகவத்தைப்பற்றியே துக்கடாபுத்தகமென்கிறோ
மென்னில், விஷயலாகவமோ விஷயகௌரவமோ அது அந்த
க்ரந்தங்களில் ஆழ்ந்து ஈடுபட்ட வித்வான்களுக்கன்றோ தெரியும்.
உத்தமாசார்யரான ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமியையும் கச்
சிஷ்யவர்க்கங்களையும் கேட்டால் தெரியவரும். கோழியாலம்
ஸ்வாமி, அண்ணாவின் சில க்ரந்தங்களைத் திருக்கையிலே கொண்டு

சித்ரபுங்கப்ரகாசாநாம் வித்யுத்ஸத்ருச வர்ச்சஸாம்
ஸ்மரந் ராகவபாணாநாம் விவ்யதே ராக்ஷஸேச்வர:

* என்கிற ஸ்ரீராமாயணச்லோகத்தை விபுலமாக உபந்யாஸம்
தருளியாகிறதாம். இந்த ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமிக்கும்
கரும் ஸ்ரீரங்கத்தில் காவேரிக்கரையில் ஒருவாக்யார்த்
போது கோழியாலம் ஸ்வாமி ஸாதித்த
ஸ்தாபித்துக்கொள்ள
இதன் வில

விமர்சம் என்கிற அண்ணாவின் க்ரந்தத்தோடு முடிவுபெற்றன. அதற்கும் ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியைக்கும் மறுப்பு எழுத வல்லமைபெற ஸ்வர்ணமுகியின் கரையிலே தபஸ்ஸு பண்ணுவதற்காகவே திருச்சானூருக்கு எழுந்தருளியாயிருக்கிறதாம்.

உப ஸம்ஹாரம்.

ப்ரக்ருதத்தில் ஸபையில் வந்த முக்கூர் ஸ்வாமியும் கீழாத்தூர் ஸ்வாமியும் மற்றவர்களைப் போல் காலிப் பேர்வழிகளல்லாமல், படித்து ஞானம் பெற்றவர்கள். இவ்விருவரும் உண்மையான ஆண்பிள்ளைகளானால் அண்ணா ஸ்வாமியின் ம[illegible]க்ரந்தங்களெல்லாவற்றையும் தள்ளி, (1) ரக்ஷாவிலோசந பாவப்ரகாசிகா (2) ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா (3) ரத்நபரீக்ஷா (4) ஸமஸ்யமாநோக்தி ஸௌஷ்டவ விமர்சம் என்கிற [ஸம்ஸ்க்ருத பாஷையில் அமைந்த] இந்த நான்கு க்ரந்தங்களை மாத்திரமாவது பரிசீலனை செய்து பார்க்கட்டும். பதில் எழுதத் தோன்றினால் எழுதட்டும். இல்லையேல் 'தொழுமத்திசையுற்று நோக்கியே' என்றிருக்கட்டும். "இந்த பாவருத்தி எங்களுக்கு ஏன்?" என்று இவர்கள் ஔதாஸீந்யம் தோற்றப் பேசுவார்களானால், ஆக்ஷேபக வேஷம் பூண்டு இவர்கள் ஸபைக்கு வந்ததற்கு அநுதாபம் காட்டவே வேண்டும்.

இனி ஸபையின் நிகழ்ச்சி.

முதல் நாளில், ஸ்ரீமத் திருமணி ஸ்வாமி பக்தியைப்பற்றியும், ஸ்ரீபெரும்பூதூர் காலேஜ் உபாத்யாயர், ஸ்ரீ. ஒ. மா. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி கீதார்த்த ஸாரமென்பது பற்றியும், கோயில், ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி, பக்தர்களின் வைபவத்தைப் பற்றியும் வெகு இனிமையாக உபந்யஸித்தார்கள். இரண்டாம் நாளில், கோயில். ப்ர. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி முன்னாள் உபந்யாஸத்தின் சேஷத்தைப் பூர்த்தி செய்த பிறகு, திருப்பதி ஸம்ஸ்க்ருத காலேஜ் ப்ரொபஸர், ஸ்ரீ. தி. அ. புரிசை கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி பாகவத சேஷத்வத்தைப் பற்றி[illegible] வெகு ரஸமாகவும் உபந்யஸித்தார். அதிக ஜனங்கள் இல்லாமல் [illegible]

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கர ஜகதாசார்ய
ஸ்ரீதேவநாதாசார்ய ஸ்வாமி
பாதாரவிந்த ஸேவாபராயணனாகிய
ஸ்ரீவைஷ்ணவதாஸன்
அண்ணங்காராசாரியனால்
இயற்றப்பட்ட

ஸத்ஸம்ப்ரதாயப்படி.

(அண்ணாவைபவ விளக்கம்.)

◆

அண்ணா வைபவத்திற்கூறிய விஷயங்களெல்லாம்
ப்ராமாணிகமானவையென்று
அநேக ப்ரமாணோபபத்திகளுடன் விவரிக்கப்பிறந்தது

◆

சென்னை:
ஹாடன் அண்டு கம்பெனியில் அச்சிடுவிக்கப்பட்டது.

ஸ்ரீமுக௵ பங்குனியுத்திரம்
1934

இதன் விலை 0—4—0.

ஶ்ரீரஸ்து.
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:.



ஸத்ஸம்ப்ரதாயப்படி.

(அண்ணாவைபவ விளக்கம்.)

ஶ்லோ|| ப்ரதிவாதிபயங்கரஸூரிமுகை:
ப்ரதிதைர்நவபி: ப்ரியஶிஷ்யவரை: |
ஸமவாப்ததவாதவயோஜயகம்
வரயோகிமநாஶ்ரய தேஶிகதய ||

1. அஸ்மதாசார்ய ஶ்ரீகாஞ்சீ ஜகத்குரு ஸ்வாமி ப்ரகாஶித்தருளின அண்ணா வைபவ க்ரந்தத்தின்மேல் ப்ரத்யவஸ்தாநமெழுதுகிற பாவனையாக "வித்வந்மநோரஞ்ஜநம்" என்கிற ஒரு சுவடி வெளிவந்திருக்கக் கண்டேன். "சோழவரம் - தட்டை. ராமாநுஜாசாரியார்" என்பவர் எழுதிய புஸ்தகமாமிது. ப்ரதிவாதிபயங்கராசார்ய வம்ஶஸ்தர்களாய் வழங்குகின்ற அஸ்மதாதிகளின் மூலபுருஷரான அண்ணாவின் சரித்திரத்தில் உண்மை மாறுபட்டிருப்பதாக இப்புத்தகம் இயம்புகின்றது. அதாவது—"அண்ணா மணவாளமாமுனிகளின் திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவர் என்று சரித்திரமெழுதியிருப்பது பிசகு. வேதாந்ததேசிகனுடைய திருக்குமாரரை ஆச்ரயித்து வேதாந்த மதிசரித்த அண்ணாவுக்கு அவருடைய ஸம்பந்தம் தவிர மணவாள மாமுனிகளுடைய ஸம்பந்தம் நேருவதற்கு ப்ரஸக்திலேசமுமில்லை" இத்யாதி விஷயங்களை இப்புத்தகம் வெகு ஆக்ரஹத்துடன் அறைகின்றது. இந்தப் புஸ்தகமெழுதியவர் தென்னாசார்ய ஸம்

ப்ரதாயஸ்தரே என்பது இதில் ஸ்பஷ்டமாகவே விளக்கப்பட்டிருக்கிறது. முகப்பில் தென்கலைத் திருமண்காப்பு அமைத்தும் * ஸ்ரீமதே ராமாநுஜாய நம: * ஸ்ரீமதே வரவரமுநயே நம: * என்று தென்னாசாரியர்களை வணங்கியும் உபக்ரமித்திருப்பதால் தென்கலை ஸ்ரீவைஷ்ணவரே யிவர் என்றறிகின்றோம்.

2 இப்படிப்பட்டவிவர் தென்னாசார்யஸம்ப்ரதாயஸ்தர்களான ஸகலதேசத்தவர்களும் நிர்விவாதமாய் பூஜநீயக்ரந்தமாக அங்கீகரித்து ஸேவித்துவருகின்ற ஸ்ரீவரவரமுநி வைபவபரமான க்ரந்தங்களைத் தாமும் ஆதரிப்பவராக இருத்தல் வேண்டும். அண்ணாவின் வைபவம் ஒருபுறமிருக்கட்டும். ஜகதாசார்யரான மணவாளமாமுனிகளின் வைபவத்தை நாம் தெரிந்துகொள்வதற்கு ஒரு ஸ்ரீகோசத்தை நாமெல்லோரும் சரணம்பற்றியே யாகவேண்டும். மணவாளமாமுனிகளின் ஸாக்ஷாச்சிஷ்யர்களில் ஒருவரான பட்டர்பிரான் ஜீயருடைய ஸ்ரீபாதத்திலவரான (அதவா ப்ரசிஷ்யரான) பிள்ளைலோகஞ்சீயர் யதீந்த்ரப்ரவண ப்ரபாவமருளிச்செய்துள்ளாரென்பது ஸர்வஸம்ப்ரதிபந்நம். அந்த ஸ்ரீகோசத்தை ப்ரபந்நாதிசயத்தாலே ஆதரியாத தென்னாசார்யர் எந்த நாட்டிலுமில்லை. ப்ரக்ருத பூர்வபக்ஷியான வித்வந்மநோரஞ்ஜநகாரரும் அந்த ஸ்ரீகோசத்தைப் பலவிடங்களில் ஸ்தாபித விஷயங்களுக்கு ஸம்வாதப்ரமாணமாகக் காட்டியுமுள்ளார்.

அவதேயம் விசேஷதஃ.

3. பூர்வபக்ஷியின் சுவடியில்(பக்கம்8-ல்)யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தில் [ஓலை ஸ்ரீகோசங்களிலும் அச்சிட்ட புஸ்தகங்களிலும்] உள்ளதற்கு மாறுபாடாக ப்ரதிவாதிபயங்கரத்தார் ஒரு சிறு விஷயத்தை எழுதிக்கொண்டதாக க்ஷேபிக்கப்பட்டிருக்கிறது. அவ்விஷயத்தின் உண்மை என்னவென்பதை மேலே ஸமயத்தில் தெரிவிப்போம். பூர்வபக்ஷியானவர் யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்தை ப்ராசீன வோலை ஸ்ரீகோசங்களிலும் ஸேவித்திருக்கிறாரென்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. அண்ணாவின் வரலாறுகளைப்பற்றி அவற்றில் ஒன்றுமில்லையென்று இவரது அபிப்ராயமா? அப்படியானால் அண்ணா வரலாறு இல்லாத யதீந்த்ரப்ரவண ப்ரபாவ

ஸ்ரீகோச மொன்றையாவது இவர் காட்டிவிட்டால் இவருடைய ப்ரஸங்கம் ப்ராமாணிகமேயென்று ஸஹ்ருதயர்கள் மதிக்கலாம்.

4, அந்த யதீந்த்ரப்ரவணப்ரபாவ ஸ்ரீகோசம் எழுபது வருஷங்களுக்கு முன்னமே அச்சிடப்பட்டிருக்கின்றது. அதற்குப்பின்பும் பல பதிப்புகளுண்டு. ஒவ்வொரு ஆசார்யபுருஷருடைய திருமாளிகைகளிலும் மடங்களிலும் ராஜகீய ஸரஸ்வதீ பண்டாரங்களிலும் அத்யாபி ஸ்ரீதாளகோசமாகவும் இதுவுள்ளது. ஆகவே இதை அர்வாசீநகல்பிதமாக ஒருவரும் சொல்லமுடியாது. அத்தகைய யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தில் மணவாளமாமுனிகளிடம் வந்து ஆச்ரயித்த சிஷ்யர்களின் கதைகளைக் கூறும் ப்ரகரணத்திலே அண்ணாவைப்பற்றி என்ன எழுதப்பட்டிருக்கிறதோ,' அந்த வாசகங்களையே பெரும்பாலும் அப்படியே கொண்டு அண்ணா வைபவம் வெளியிடப்பட்டிருக்கின்றதேயன்றி அபூர்வ கல்பனையாக ஒரு அக்ஷரமும் எழுதியிருக்கவில்லை.

5. யதீந்திரப்ரவணப்ரபாவம் ஒன்றேயன்று; மணவாளமாமுனிகளின் திருப்பேரனாரும் நக்ஷத்ரமாலிகாகாரருமான ஜீயர்நயினார் அருளிச்செய்த ஸ்ரீவரவரமுநி சம்பூக்ரந்தம், ஸ்ரீவைஷ்ணவஸமயாசாரநிஷ்கர்ஷமும், பழநடை விளக்கம் முதலிய பல பல ப்ராமாணிக க்ரந்தங்களிலும் அண்ணா விஷயமாக வெளியிட்டிருக்கிற வரலாறுகளே அண்ணா வைபவ நூலில் கூறப்பட்டுள்ளன. மேற்குறித்த க்ரந்தங்கள் இல்லையென்றாவது அவை அப்ராமாணிகங்களென்றாவது இதுவரையில் ஒரு தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தரும் சொல்ல நாம் கேட்டதில்லை. சம்பூ ஒன்று தவிர மற்ற க்ரந்தங்களை ப்ரக்ருத பூர்வபக்ஷியும் தமது நூலில் மேற்கோளாக எடுத்து ஆண்டிருக்கிறார். இவரும் அவை அவிஶ்வஸநீயமென்றுரைக்கவில்லை.

6. மேற்குறித்த க்ரந்தங்களை வடவாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஆதரிக்கிறார்களா? என்று விசாரம் வரில், அது வேறு விஷயம். அவர்கள் இப்போது பூர்வபக்ஷிகளாக இல்லை. அவர்களுக்குத் தக்கவாறு விடையளிக்கவேண்டிய ப்ரகாரம் வேறு. அதனையும் பிறகு வெளியிடுகிறோம். தற்போது பூர்வபக்ஷியாக வெளிவந்திருப்

பவர் ஸமர்த்தராகையாலும், இவர் யதீந்த்ரப்ரவணப்ரபாவாதிகளில் சிறிதும் வைமுக்யம் காட்டிற்றிலராதலாலும் அப்படிப்பட்ட ஸகல தென்னாசார்ய ஸம்ப்ரதாயஜ்ஞ ஸம்ப்ரதிபந்நங்களான ஸச்சாஸ்த்ரங்களின் ஸம்வாதத்தைக்கொண்டு நாம் உண்மையை விளக்குவோமானால் அதனை இந்தப் பூர்வபக்ஷி ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவரேயாவர்.

7. கலியுகம் பிறந்த எத்தனையாவது வருஷத்தில் அண்ணாவின் திருவவதாரம் என்கிற விஷயம் அடுத்தபடியாக ஸமர்த்திக்கப்படும். ஒவ்வொரு அம்சத்திலும் பூர்வபக்ஷிக்குப் பரம த்ருப்திகரமாகவே விடையளிப்போம். பிரதிவாதிபயங்கரத்தார் வெளியிட்டுள்ள அண்ணா வைபவ நூல்கள் அடியோடு இல்லையென்றே வைத்துக் கொண்டு விமர்சிக்கவேண்டும். நமக்கெல்லாம் ஸதாசார்யரான மணவாளமாமுனிகளின் வைபவத்தையும் அவரது திருவடித்தாமரைகளிலே வந்து பணிந்து உய்ந்த மஹான்களின் வரலாறுகளையும் யதீந்த்ரப்ரவண ப்ரபாவாதி நிரவத்ய நிர்விவாத க்ரந்தங்களிலிருந்து அறிந்துபோருகின்ற நாம் ‘அண்ணா மணவாளமாமுனிகளின் திருவடிகளில் ஸகுடும்பராக வந்து ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கப்பெற்றார்’ என்பதையும், ‘மணவாளமாமுனிகளுக்கு அந்தரங்கசிஷ்யர்களாகப் ப்ரஸித்தர்களான அஷ்டதிக்கஜாசார்யர்களிலே அண்ணாவும் சேர்ந்தவர்’ என்பதையும் ஸ்பஷ்டமாக அறிந்து அநுஸந்தித்துவருகிறோம்.

8. ஸ்வாமி எம்பெருமானாராகத் திருவவதரித்திருந்த காலத்தில் எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளை நியமித்தருளினாரென்றும், அவர்தாமே மணவாளமாமுனிகளாகப் புநரவதாரம் செய்தருளின காலத்திலே அஷ்டதிக்கஜங்களை நியமித்தருளினாரென்றும் வைபவ நூல்களிலுள்ளதுந்தவிர ஸம்ப்ரதிபந்ந ஸார்வஜநீந விஜ்ஞஜநவ்யவஹாரத்தாலும் இது அபஹ்நவிக்கவொண்ணாதவிஷயம். அண்ணாவைத் தவிர்த்து அஷ்டதிக்கஜபரிகணநம் இதுவரையில் யாராவது செய்திருப்பதுண்டோ?

9. பூர்வபக்ஷியானவர் தமது நூலில் இந்த விஷயத்தைத்தாமே முந்துற முன்னம் ஸமர்த்தித்திருக்கவேண்டும். இனியாவது அவர் இதை ஸமர்த்தித்துத் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களனைவரும் அங்கீகரிக்கக்கூடிய ஏதேனுமொரு ப்ரமாணத்தை முன்னிட்டுக் கொண்டு அண்ணா இல்லாமலே அஷ்டதிக்கஜபரிகணநை ஒழுங்காகிவிடுகிறதென்பதையும் அண்ணா ஸ்தாநத்திலே நிவேசிக்கப்படுகிறவர் இன்னாரென்பதையும் நிரூபித்தால் ப்ராமாணிகமும் பொலியும்.

10. அண்ணா வைபவ பரமாக ப்ரதிவாதிபயங்கரத்தார்கள் வெளியிட்டுள்ள புஸ்தகங்களை மறுதலிக்கவேணுமென்று பூர்வபக்ஷிக்கு உத்தேசமிருப்பின் - ஸர்வஸம்ப்ரதிபந்நஸ்வீய ஸம்ப்ரதாயக்ரந்தங்களோடு விரோதிக்கும்படியாக அவற்றில் ஏதாவது அஸங்கதவாக்யங்களுமிருந்தால் அப்படிப்பட்ட விஷயங்களை மாத்திரம் ப்ரமாணஸஹகாரமற்றதென்றே உபபத்திவிருத்தமென்றே நிரூபித்து நிரஸிக்கலாமேயல்லது, தானும் தலைமேல் வைத்துக் கொண்டாடவேண்டிய ஸ்ரீகோசங்களிலேயே அத்யாவதி அவிகீதமாக அமைந்துள்ள விஷயங்களையும் ஸஹஸா தூஷித்துவிடுவது தகுமோ? ஸஹ்ருதயர்களுக்கு அயதாகாராதி நிவாஸநமாக சாஸ்த்ரமுண்டாகி அநுஜன் அக்ரஜனைப் பழிக்கப்புகுந்தால் ததேகஸ்பர்சியாகக்கூடிய தூஷணங்களை எவ்வளவும் வாரியிறைக்கலாம்; அங்ஙனன்றிக்கே தனக்கும் அவத்யத்தை விளைக்கவல்ல தூஷணங்களைப் பொழிந்தால் அவனை விவேகிகள் என்னவென்று சொல்லக்கூடும்?

11. ஜகதாசார்ய ஸ்ரீ உபந்யாஸாசார்யர் ஸ்வாமி வெளியிட்டருளின அண்ணா வைபவத்தில், அண்ணா திருமலையிலே திருமஞ்சன கைங்கரியஞ் செய்துகொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிற கதைக்குக் கீழுள்ள பாகங்கள் தவிர, அதற்கு மேலுள்ள பாகம் பெரும்பாலும் யதீந்திரப்ரவண ப்ரபாவம், ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம், பழநடைவிளக்கம் முதலான ஸர்வஸம்மத க்ரந்தங்களில் ஸ்பஷ்டமாகக் காணப்படுவதே. பூர்வபக்ஷி எந்த முக்கியமான விஷயங்களை அஸம்பாவிதமென்று எழுதியிருக்கிறாரோ அந்த விஷயங்களெல்லாம் மேற்குறித்த நூல்களிலுள்ளவைதானே.

12. ஜகத்குருஸ்வாமி முதன் முதலாக வெளியிட்டிருக்கிற அண்ணாவைபவத்தில் வரலாறுகள் மாத்திரமேயன்று, வாக்கியங்களுங்கூட [நூற்றுக்குத் தொண்ணூறு] யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்திலிருந்து அப்படியே எடுத்தெழுதப்பட்டவைகளாகக் காணப்படுகின்றனவேயன்றி ஸ்வகபோலகல்பிதங்களாக இல்லை

13. திருவல்லிக்கேணியில் வைத்தமாநிதி அப்பங்காரென்று ஸுப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த ஸ்வாமியாலும், பலபல ஸம்ப்ரதாயக்ரந்தங்களை அச்சிட்டு வெளியிட்டருளின சித்ரகூடம் கந்தாடை ஸ்வாமியாலும் பரிசோதிக்கப்பட்டு 1865 ஆம் வருஷத்தில் அச்சியற்றப்பட்டுள்ள யதீந்திரபிரவணப்ரபாவத்தில் அறுபத்தோராவது பக்கம் தொடங்கியும், அதற்குப்பிறகு சடகோப ராமாநுஜாசாரியர் ஸ்வாமியால் பரிசோதிக்கப்பட்டு 1907 ஆம் வருஷத்தில் அச்சிடப்பட்ட யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தில் எழுபத்து மூன்றாவது பக்கம் தொடங்கியும், ஸ்ரீ வைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபையார் இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் அச்சிடுவித்த யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தில் எண்பத்தெட்டாவது பக்கம் தொடங்கியும் ஸேவித்தால், அண்ணா மணவாளமாமுனிகளின் ஸ்ரீபாதத்தில் ஆச்ரயித்தவரலாறு விசதமாகும்.

14. மணவாளமாமுனிகளின் திருப்பேரனார் பணித்த வரவரமுநி சம்பூப்ரபந்தமும், எறும்பியப்பா பணித்த வரவரமுநி காவ்யமும், வரயோகி [illegible], வரயோகி [illegible] முதலான க்ரந்தங்கள் பல ஆசார்ய புருஷர்களின் திருமாளிகைகளில் உண்டு. இந்த க்ரந்தங்களில் ரஹஸ்ய ரஹஸ்ய வாக்யஜாதங்கள் பல இருப்பதால் அச்சிடுவிக்க முடியாமலிருக்கிறதென்று பல மஹான்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். அவற்றில் அண்ணா மணவாளமாமுனிகளிடம் வந்து ஆச்ரயித்தது, அஷ்டதிக்கஜங்களில் ஒருவராக அமைத்தது முதலிய வரலாறுகள் [illegible]ங்களாகவுள்ளன. இது நம்முடைய கல்பனையென்று சொல்வதற்கு இடமில்லாதபடி யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்திலேயே அவற்றிலிருந்து பல ச்லோகங்கள் உதாஹரிக்கப்பட்டிருப்பதைக் கண்ணாரக் காணலாம். அண்ணா வந்து ஆச்ரயித்தபின்பு மணவாளமாமுனிகள் திருமலையாத்திரையாகப் புறப்பட்டருளினதைக் கூறுகிற இடத்திலே (யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்திலே) “* [illegible] என்கிறபடியே அண்ணா முதலான அநேக ஸ்ரீவைஷ்ணவர்களுடனே திருக்காவேரி யடக்கு நோக்கிப் புறப்பட்டருளி” [illegible]யாகவுள்ள வாக்கியங்களைக் காண்க. மேற்குறித்த * [illegible] என்ற ச்லோகம் அந்த சம்பூவிலுள்ளது.

15. ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி, வானமாமலை சின்ன கலியன் ராமாநுஜஜீயர் ஸ்வாமிகளும், பெருமாள்கோயில் வாதிகேஸரி அழகியமணவாள ராமாநுஜஜீயர் ஸ்வாமிகளும் உபகரித்தருளின ஸ்ரீகோசங்களைக்கொண்டு அயோத்யா ராமாநுஜஜீயர் ஸ்வாமி யென்கிற காரப்பங்காடு ஜீயர் ஸ்வாமி பரிசோதித்துப் பதிப்பித்த (1909 ஆம் வருஷத்தில் வெளிவந்திருக்கின்ற) ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசாரநிஷ்கர்ஷ மஹாக்ரந்தத்தில் 67, 70, முதலிய பலபல பக்கங்களில் அண்ணாவைப்பற்றிப் பேசியிருப்பதுங் காண்க.

16. அநேகப்ராசீநக்ரந்தங்களையே பற்றுக்கோடாகக்கொண்டு பரமப்ராமாணிகரான திருமழிசை அண்ணாவப்பங்கார் ஸ்வாமி அருளிய பழநடை விளக்கத்திலும் இவை விரிவாகக்காணத்தக்கன

17. ஏறக்குறைய முந்நூறு வருஷங்களுக்குமுன் பிறந்தவரும், தாதாசார்ய சிஷ்யரும், உபய ஸம்ப்ரதாய ஆசார்யர்களுடையவும், மற்றும் ஸகல ஆழ்வாராசார்யர்களுடையவும் வைபவங்களை எண்ணாயிரம் சுலோகங்களாலே பணித்தவரும் வடகம்பி வம்சத்தவருமான அநந்தார்ய மஹாகவி இயற்றிய ப்ரபந்நாம்ருதமென்னும் காவ்யத்திலே 122 ஆம் அத்யாயத்திலே (பக்கம் 420)

“[illegible] ஸர்வே வைஷ்ணவா வீதகல்மஷா: |
[illegible] ||

அஷ்டௌ [illegible]
விஶ்ருதா: |
ஸ்ரீவாநாசலயோகீந்த்ரா [illegible] |
ஸ்ரீநிவாஸஸ்ய திவ்யஸ்ய தேவராஜ[illegible] ||

ஸஹாநுயாயிகு³ருவரை: நாராயணமுநீஶ்வரா |
ஸார்தா⁴யாயஸஶிஷ்யை: ப்ரதிவாதி³ப⁴யங்கர: |
...ஸந்நிதே⁴ ஸஹவஸந் ஸ்வநாதா ஜநத்ராணேஷ்டவிக்³ரஹா: ||

என்றுள்ள ச்லோகங்களும் காணத்தக்கன.

18 ஏதேனும் சில ஹேத்வாபா⁴ஸங்களைக்கொண்டு மேற்குறித்த நூல்களுக்கெல்லாம் ஒரு கண்ணழிவு சொல்லிவிட்டாலும், ஆழ்வார் திருநகரியிலும் கோயிலிலும் மணவாளமாமுனிகளின் திருக்கோலம் எழுந்தருளப்பண்ணியிருக்கிற ஸந்நிவேசம் என்றைக்கும் ஸேவிக்கலாம். ப்ராசீந காலத்திலேயே அமைந்த திருக்கோலங்களாமிவை. அப்படிப்பட்ட தி³வ்யமங்க³ள விக்³ரஹங்களில் ஸ்வாமியின் திருவடிவாரத்திலே அஷ்டதி³க்³க³ஜங்களையும் திருக்கோலமாகவே ஸேவிக்கின்றோம். அண்ணாவும் அவர்களிலொருவராகவே ஸ்தாபிக்கப்பட்டு வருகிறாரென்பதை மூவுலகு மறியும். அண்ணாவைத் தவிர்த்து வேறு ஒரு சிஷ்யர் அந்த வரிசையிலிருப்பதாகத் திருநகரியிலும் சொல்வாரில்லை, கோயிலிலும் சொல்வாரில்லை. இத்தகைய நிரபாய ப்ரத்யக்ஷ ப்ரமாணங்களும் ஶப்³த³ப்ரமாணங்களும் ஸத்³வ்யவஹாரங்களும் அளவற்றுக் கிடக்கும்போது கேவலம் ஆக்³ரஹத்தாலே இவை இத்தனையையும் மறந்தோ மறைத்தோ ஒருவர் ஒரு புதிய மாயத்தைக் கிளப்பினால் தத்த்வார்த²மும் தலைகீழாய்விடுமோ ?

19. அண்ணாவைபவ நூல்களில் அண்ணாவின் அவதாரவருஷமாகவும் அவஸாந வருஷமாகவும் குறிப்பிடப்பட்டுள்ள கலியுகா³தி³ வர்ஷஸங்க்²யையைப் பார்க்குமிடத்து மணவாளமாமுனிகளுடைய இருபத்தினான்காவது திருநக்ஷத்திரத்தில் அண்ணா பரமபதித்தாரென்பது நிஸ்ஸம்ஶயம் என்கிறார் பூர்வபக்ஷி.— அத்ரோச்யதே. மானிடரியற்கைக்குரிய ப்ரமாதா³திகளாலே ஒரு அக்ஷரமும் ஒரு லக்கமும் மாறி விழுந்திருக்குமளவால் நாம் கீழே நிரூபித்துக்காட்டிய அப்ரத்யக்ஷப்ரமாணராஶிகள் தலை மடிந்து போய்விடுமோ? கலியுகா³தி³ 4463 ஆம் வருஷத்தில் அண்ணாவின் திருவவதாரமென்றும் 4556 ஆம் வருஷத்தில் அவருடைய பரமபத³ப்ராப்தியென்றும் அச்சிடவேண்டுமிடத்து 4403 என்றும் 4496 என்றும் ஜகத்குருஸ்வாமி அச்சிட்டிருக்கிறாரென்பது வாஸ்தவம். அவதார ச்லோகத்தில் * கா³தி³ நவவேதா³ப்³தி⁴ ஸாக்ஷரஸங்க்²யா உபலக்ஷிதே கலியுகா³தி³ வர்ஷக³ணனையைச் செய்யுமிடத்து (ஊஷஹாவ) [அயநா - ஊத³ஹாவ] என்றிருந்ததில் ஏதோ ப்⁴ரமத்தாலே ஷ (த)கார ஸ்தா²நே நகாரம் நிவிஷ்டமானதால் 4403 என்று குறிப்பிட நேர்ந்திருக்கலாம். இதில் ஒரு ஷஷ்ட்யப்³த³விபர்யயம் புரண்டு போய்விடுகின்றது. ஒரே இடத்தில் மணவாளமாமுனிகளின் அவதார வருஷ லக்கமும் அண்ணாவின் அவதார வருஷ லக்கமும் எழுதப்பட்டிருந்தால் வாசகர்களுக்கு காலவிபர்யயம் ஸ்புரிக்கும்; அதனால் ஜாக³ரூகதையும் ஏற்படும். அண்ணா வைபவ நூல்களில் மணவாளமாமுனிகளின் அவதார வருஷ லக்கம் எழுதப்படாமல் அண்ணாவினது மாத்திரமே எழுதப்பட்டபடியால் ஸங்க்²யாநிர்தே³ஶத்தில் ஸாதாரணமாக நேர்ந்துவிட்ட ப்⁴ரமம் கவனிக்கப்படாமற் போயிருக்கவேணும் - என்கிற இவ்வளவுதான் விவேகிகள் நிச்சயிக்கக்கூடியது. அதே அண்ணா வைபவத்தை நான்கு வருஷங்களுக்கு முன் (1930ல்) திருநாங்கூர் ஸ்வாமிகள் அச்சிடுவித்தபோது முதலில் மேற்குறித்த வர்ஷஸங்க்²யாவிபர்யயத்தில் ஆராய்ச்சியின்றியே அச்சிடப்பட்டு, பிறகு ஆராய்ச்சி யுண்டாகி முகப்பிலேயே பிழைதிருத்தம் வெளியிடப்பட்டுள்ளதை அனைவரும் காணலாம்.

20. பூர்வபக்ஷியும் அதைக் கண்டிருக்கின்றாரென்று ஸ்பஷ்டமாகவிளங்குகின்றது. பூர்வபக்ஷநூலில் (பக்கம் 8-ல்) இந்தப் பிழைதிருத்த விஷயம் ப்ரஸ்தாவிக்கப்பட்டு விஶேஷிகாரரூபமான ப்ரத்யாக்²யாநமும் பூர்வபக்ஷியால் செய்யப்பட்டுள்ளது. அதாவது — "அண்ணாவின் அவதாரகாலமான 4403 வது வருஷத்தை 4463 வது வருஷமாக மாற்றத்துணிவதற்கு ஜ்யோதிஷம் இடம் கொடாததுடன் ஜ்யோதிஷர்கள் பரிஹஸிக்கவும் நேரிடும். ஆகையால் இவ்வழியில் ப்ரவேசிக்காமலிருப்பதே உசிதம்." என்று எழுதப்பட்டிராநின்றது.

21. இது ப்ராஸங்கிகமான வார்த்தையேயத்தனை. ஜ்யோதிஷமென்பது பலர்க்கும் பொதுவானது. அதைக்கொண்டு ஆராய்ச்சி செய்யவல்லவர்கள் எந்நாட்டிலுமுளர். "அண்ணாவின் திருவவதாரம் கலிஹு 4463 ல் அன்று, 4403ல் தான்" என்று எந்த ஜ்யோதிச் சாஸ்திரம் சொல்லுகின்றதோ தெரியவில்லை. அண்ணாவின் அவதார ச்லோகத்திலுள்ளபடி திதி வார நக்ஷத்ராதி யோகங்கள் 4403 வருஷத்திற்கு இணங்குமேயன்றி 4463 வருஷத்திற்கு இணங்கமாட்டாதென்று பூர்வபக்ஷியின் அபிப்ராயம்போலும்.

22. இங்கு நாம் விஜ்ஞாபிப்பதை விவேகிகள் குறிக்கொள்ளவேணும். ஆழ்வார்களின் திருவவதார வருஷ மாஸ திதி வார நக்ஷத்ராதி நிர்ணயங்கள் நமது முன்னோர்களின் க்ரந்தங்களில் இருப்பதைப் பிடித்துக்கொண்டு அர்வாசீநர்களான விமர்சகம்மந்யர்கள் ஆழ்வார்களின் காலக்ரமத்திலே பலவகையான மாறாட்டங்களை நிரூபித்துப் பல புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்களென்பது உலகமுணரும். முன்னேயிருந்த ஆழ்வார்களைப் பின்னே தள்ளி, பின்னேயிருந்த ஆழ்வார்களை முன்னே தள்ளி இவ்விதமாகப் பல விபர்யாஸங்களை வெளியிட்டிருக்கிறார்கள். ராமக்ருஷ்ணாத்யவதாரங்களிலும் இங்ஙனே பௌர்வாபர்ய விபர்யயங்களும் காலவிரோதங்களும் அஸம்பாவிதகதாப்ரஸங்கங்களும் நூற்றுக்கணக்கான புஸ்தகங்களினால் பலபாஷைகளிலும் வெளியிடப்பட்டிருப்பதும் ஸர்வப்ரஸித்தம். அப்படிப்பட்ட விபர்யாஸங்கள் ஆசாரியர்கள் திறத்திலும் விளைவது வியப்பன்று. "ஜ்யோதிஷம் இடம் கொடாது" என்றும் "ஜ்யோதிஷர்கள் பரிஹஸிக்கவும் நேரிடும்" என்றும் அதித்ருஷ்டமாக எழுதியிருக்கிற பூர்வபக்ஷியானவர் முக்கியமாக ஒரு காரியமே செய்தருளவேண்டும். ஸ்ரீமந்நாதமுனிகள் தொடங்கி எல்லா ஆசாரியர்களுக்கும் வருஷ மாஸ திதி வார நக்ஷத்ராதிகள் தனித்தனியே திருமுடியடைவு, குருபரம்பராப்ரபாவம் முதலான பல நூல்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. "அண்ணாவொருவர் தவிர மற்ற எல்லா ஆசார்யர்களுக்கும் அந்தந்த காலயோகம் நிரபாயமாக இணங்கிவிடுகிறது, அண்ணாவொருவர்க்குத்தான் அது இணங்கவில்லை; அண்ணாவின் அவதாரம் 4403 என்றால்தான் அந்த காலயோகம் இணங்குகிறது, 4463 ல் என்றால் இணங்கவேமாட்டாது" என்பதை நாலு தைவஜ்ஞர்களின் முன்னே நின்று நிரூபித்துவிட்டால் பூர்வபக்ஷியின் உக்திதான் பரமஸித்தாந்தமென்று போற்றக் குறையில்லை.

23. அண்ணாவின் திருவவதாரம் 4463ல் தான் என்பதையும் 4403 ல் ஸர்வாத்மநா அஸம்பாவிதம் என்பதையும் உபயஸம்ப்ரதாயஸ்தர்கள் இசையும்படியாகப் பல சான்றுகள் காட்டுகின்றேன், காண்மின். ஸ்ரீவேதாந்ததேசிகனுடைய திருக்குமாரரான வரதநயினாருடைய ஸந்நிதியிலே அண்ணா வேதாந்தம் அதிகரித்துக்கொண்டிருந்தாரென்றும், அந்த ஸமயத்திலே ஒரு அத்வைதி பண்டிதன் வந்து நயினாராசார்யர் ஸ்வாமியை வாதத்திற்கு அழைத்தானென்றும், அப்போது அவர் அத்யந்தம் வ்ருத்ததசையிலிருந்தபடியாலே அண்ணாவை வாதத்திற்கு அனுப்பியருளினாரென்றும், அண்ணாவும் சென்று வென்று "மலையப்பன் மணிபெற்ற வரதார்யன் பரவாதிபீகராவென்றணைக்க நேர்ந்த தேவா" என்கிறபடியே நயினாராசார்யரால் ப்ரதிவாதிபயங்கரரே! என்று அருளப்பெற்றாரென்றும் இந்த வரலாறுகளை உபயஸம்ப்ரதாயஸ்தரும் ஒருங்கே சொல்லிப்போருவது அபலபிக்கவொண்ணாதது. [இது எழுத்திலுமுள்ளது.] இதனால் நயினாராசார்யருடைய வார்த்தக்யதசையில் அண்ணாவின் இளம்பிராயம் என்று ஸ்பஷ்டமாக விளங்குகிறது. ப்ரக்ருதத்தில் அண்ணாவின் திருவவதார வருஷத்தில் விப்ரதிபத்தி விளைந்திருந்தாலும் தேசிகனுடையவும் அவரது திருக்குமாரருடையவும் அவதார வருஷங்களில் ஒரு விப்ரதிபத்தியுமில்லை.

கலிஹு: **4371** ல் தேசிகன் திருவவதாரம்.
" **4418** ல் நயனாராசார்யர் திருவவதாரம்.

என்பது பல ப்ரமாணங்களினால் நிர்விவாதஸித்தம். வடாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களும் வைபவநூல்களில் இப்படியே குறிப்பிட்டுள்ளார்கள். தேசிகனுடைய நாற்பத்தேழாவது திருநக்ஷத்திரத்திலே திருக்குமார வரதாசார்யருடைய திருவவதாரமென்றதாயிற்று. இனி, அண்ணா திருவவதாரம் **4403** ல் என்றால் நயனா

ராசார்யருடைய திருவவதாரத்திற்குப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னமே அண்ணாவின் திருவவதாரமாய்விட்டது என்று சொல்லித்தீரவேணும். அத்வைத வாதி வந்து வாதத்திற்கு அழைத்த காலத்திலே நயனாராசார்யரைவிட அண்ணாவே வயோவ்ருத்தர் என்று பூர்வபக்ஷி இசைந்தே தீரவேண்டும். இதுதான் ஸ்வவ்யாஹதநா அஸம்பாவிதமென்று ஸஹ்ருதயர்களும் பூர்வபக்ஷியும் உணர ப்ராப்தம். இந்த வொன்றுக்கு விடையளித்தால் போதும்.

24. அன்றியும், நயினாராசார்யருடைய வைபவம் எழுதியுள்ள வடவாசார்யர்களும் அண்ணா மணவாளமாமுனிகளின் காலக்ஷேப கோஷ்டியிலே எறும்பியப்பா முதலானவர்களால் அழைத்துக் கொண்டுபோய் அந்வயம் செய்விக்கப்பெற்றாரென்றும், சிலநாள் அங்கே கேட்டுக்கொண்டிருந்து பிறகு தூஷித்துவிட்டுத் திரும்பினாரென்றும் எழுதிவைத்திருக்கக் காண்கிறோம். இதில், "தூஷித்துத் திரும்பினா"ரென்கிற விஷயம் அப்படி யிருக்கட்டும்; அதைப் பற்றி மேலே உண்மை விளக்குவோம். எறும்பியப்பாவோடுகூட அண்ணாவும் மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தி கோஷ்டியில் சிலகாலம் அந்வயித்திருந்தாரென்கிற அளவு இதில் கிடைப்பதால் மணவாளமாமுனிகளின் இளமையிலேயே அண்ணா திருநாட்டுக்கெழுந்தருளிவிட்டாரென்று பூர்வபக்ஷி பகர்வது ஒரு ஸம்ப்ரதாயஸ்தர்க்கும் உடன்பாடன்றென்பது விளங்கிற்று.

25. ஆக இவ்வளவால் பூர்வபக்ஷநூலில் 'மணவாளமாமுனிகளின் முப்பதாவது திருநக்ஷத்திரத்திற்குமேல் ஸந்யாஸாச்ரமத்தில் நேரிடக்கூடிய *காந்தோபயந்த்ருயமிந: கருணைகபாத்ர மென்பது அண்ணா தனியனில் அமைவது அஸம்பாவிதம்" என்ற வாதம் தள்ளுண்டது. மணவாளமாமுனிகள் ஆச்ரம ஸ்வீகாரஞ் செய்தருளி க்ரந்தப்ரவசநமும் நடத்தியருளுகிற காலத்திலே நயினாராசார்யர் ஜீவித்தெழுந்தருளி யிருந்தாரென்பதும் அந்த நயினாராசார்யரும் பரமபதித்த பின்பும் அண்ணா எழுந்தருளியிருந்தாரென்பதும் நயினாராசார் வைபவநூலினாலும் நன்கு விளங்கும்போது பூர்வபக்ஷியின் கூடசோத்யங்கள் ப்ராமாணிககோஷ்டியிலே எங்ஙனே தலைகாட்டும்.

26. முதலியாண்டான் திருவம்சஸ்தரான கோயிலண்ணன் முதலானோர்க்கு மணவாளமாமுனிகளின் நியமனத்தினால் அண்ணா

ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் ப்ரஸாதித்தருளினாரென்று அண்ணா வைபவத்தில் எழுதப்பட்டிருப்பதால், இதைக்கண்ட பூர்வபக்ஷியானவர் ஸ்வதஸஹிஷ்ணுவாய் இந்த வ்ருத்தாந்தத்தை இல்லை செய்துவிடவேண்டு மென்பதையே ப்ரதாநலக்ஷ்யமாகக்கொண்டு அந்த காலத்திலே அண்ணாவின் ஜீவிததசையே கிடையாதென்று உக்திவிரோதப்ரயோகம் பண்ணினால்தான் நலம் என்று துணிந்து ப்ரவர்த்தித்தாரென்பது தெற்றென விளங்கும்படியாக (பக்கம் 5 ல்) "அன்றியும்" என்று தொடங்கி "கோயிலண்ணன் ப்ரப்ருதிகளுக்கு மணவாளமாமுனிகளின் நியமநத்தால் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் அண்ணா ஸாதித்தாரென்பது...........முதலான விஷயங்கள் மணவாளமாமுனிகளின் இருபத்தைந்தாவது திருநக்ஷத்திரத்தில் பரமபதித்த அண்ணாவுக்கு இந்த லோகத்திலன்றிக்கே லோகாந்தரத்தில் நடந்ததுபோலும்" என்றளவும் எழுதப்பட்டுள்ளது.

27. இந்த சோத்யத்திற்கும் ஸாரமாக விடையளிப்போம். அண்ணா விஷயமாக அவரது திருக்குமாரர் அருளிச்செய்த மங்களாஸந பத்யாவளியில் * வாதூலதேசிகாதீநாம் ஸ்ரீபாஷ்யார்த்தப்ரதாயிநே | வாதிஹம்ஸாம்புவாஹாய தேசிகேந்த்ராய மங்களம் * என்னுள்ள ச்லோகம் அண்ணாவைபவம் வெளியிடுவதற்குமுன் நாற்பது வருஷங்களுக்கு முந்தியே வெளியிடப்பட்டும் அண்ணா ஸந்நிதிகளில் அநுஸந்திக்கப்பட்டுக்கொண்டுமிருக்கையில் வாதூலதேசிக ஶிஷ்யவர்க்கத்தவர் சிலர் இப்படிக்கொரு ப்ரமாண முண்டோ என்று கேட்டு ஸபையும் கூட்டி வாதித்தபோது யதீந்த்ரப்ரவண ப்ரபாவ ஸ்ரீகோசத்தைக் கொண்டுவரும்படி அவர்கள் தமக்கே கட்டளையிட்டு அவர்கள் கொணர்ந்த ஓலை ஸ்ரீகோசங்களிலும் அச்சுப்புத்தகங்களிலுமே ஸ்ரீஜகத்குருஸ்வாமி இந்தவ்ருத்தாந்தத்தை ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டியருளி ஸமாஹிதராக்கினர்: அப்போது ஸம்பாதிக்கப்பட்ட ஏழெட்டு ஓலை ஸ்ரீகோசங்கள் இன்னமும் ஸுரக்ஷிதங்களாகவே யுள்ளன. வாதூலதேசிகர் திருமாளிகைஶிஷ்யர்களே 1866 ஆம் வருஷத்தில் [அதாவது எழுபது வருஷங்கட்கு முன்பு] அச்சிடு

வித்து எங்கும் பரவியுள்ள யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்தில் (பக்கம் 105 ல் 13ஆம் வரி முதலாக)

> "ஒருநாள் ப்ரதிவாதிபயங்கரமண்ணாவை அழைத்தருளிக் கந்தாடை யண்ணன் போரேற்று நாயனார் அனந்தய்யனப்பையெம்பெருமானார் ஜீயர்நாயனார் கந்தாடைநாயன் இவர்களெல்லாருக்கும் ஸ்ரீபாஷ்யம் ஸாதித்தருளும்படிக்கு நியமித்து இவர்க்கு ஸ்ரீபாஷ்யாசார்யரென்று திருநாமம் ப்ரஸாதித்தருளி பாஷ்ய ஸிம்ஹாஸநத்திலே அபிஷேகம் செய்தருளினார்"

என்றுள்ள ஸ்ரீஸூக்திகளை இற்றைக்கும் எற்றைக்குங் காணலாம்.

28. 'யதீந்திரப்ரவண ப்ரபாவத்திலுள்ளதா யிருந்தாலும் அது பிசகு பிசகுதான்' என்று பூர்வபக்ஷி தூஷிக்கத் தலைப்படுவரேல், அப்போது இவர் ஒரு வரம்பில் நில்லாதவர் என்பதும், வெறும் துராக்ரஹமே தலையெடுத்து ப்ரமாண ஸம்ப்ரதாயமின்றியே குவாதங்களையே செய்யக் கற்றவர் என்பதும் வெளிப்படையாம்.

29. 'யாம் எங்கள் நூல் கூடஸ்தர்க்கு இல்லாத ஒரு அதிசயத்தை நவீந கல்பனையாகக் கல்பித்து எழுதினோமல்லோம், ஸர்வஸம்ப்ரதிபந்ந க்ரந்தங்களிலுள்ள ஸாரங்களையே வெளியிடலானோம்' என்று ப்ரமாணபரணர்கட்கு நிரூபித்துக்காட்டவேண்டிய கடமையை நாம் ரக்ஷித்துக்கொண்டோம். யதீந்த்ரப்ரவணப்ரபாவநூலை ப்ரதிவாதிபயங்கர வம்சஸ்தர்கள் பதிப்பித்திலர். இப்போது பொறாமைப்படுகிற வகுப்பினரைச் சேர்ந்த முன்னோர்களே பதிப்பித்துள்ளார்களென்பதும், அந்தப் பதிப்புக்களில் அப்ராமாண்யசங்கை கொள்வதற்குப் பூர்பக்ஷிக்கு ஒரு ந்யாயமுமில்லையென்பதும் விவேகிகளின் உள்ளத்தில் ஊன்றியேயிருக்கும். ஓலை ஸ்ரீகோசங்களுமுள்ளனவே.

30. பூர்வபக்ஷியானவர் இவ் விஷயத்தில் அளவுகடந்த ஆக்ரஹத்தை அக்ஷரங்கள்தோறும் ஆவிஷ்கரித்துள்ளார். அண்ணாவுக்கும் மணவாளமாமுனிகளுக்கும் ஸமாநகாலிகத்வத்தை ஸாதித்துக்கொள்வதற்காகவே அண்ணா கோயிலண்ணனுக்கு ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் ஸாதித்ததாகக் கதை தொடுக்கப்பட்டதென்று பூர்வபக்ஷியின் வாதம். அண்ணாவுக்கும் மணவாளமாமுனிகளுக்குமுள்ள ஸம்பந்தம் அப்ரத்யக்ஷ ப்ரமாணஸித்தமென்பது மேலே பரக்க நிரூபிக்கப்பட்டது. * வாயஜகுருதேசிகாதீநாம் ஸ்ரீஸாக்ஷாத்ப்ரதாயிநே * என்ற அண்ணாவின் மங்களாசாஸநத்தில் மாத்திரமிருந்துவிட்டால் பூர்வபக்ஷி எவ்வளவும் வாய்வீசலாம். ஸர்வஸம்ப்ரதிபந்ந யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்திலேயே உள்ளதான இதில் அஸஹ்யதையினால் இடும் தூஷணங்கள் ப்ராமாணிக [illegible]ங்கள்.

31. கோயிலண்ணன் அண்ணாவினிடத்தில்தான் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் செய்தருளினாரென்று முஷ்டிபிடிக்க முயல்கின்றிலோம். ப்ராமாணிக க்ரந்தங்கள் கூறியுள்ளதை நாம் கூறக் கடமைப்பட்டுள்ளோம். அண்ணன் தமது பரம்பரையிலேயே ஒருவரிடத்தில் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் செய்திருக்கலாமென்றும், அல்லது மணவாளமாமுனிகளிடத்திலேயே செய்திருக்கலாமென்றும் ப்ரதிபக்ஷி செய்திருக்கிற அப்ரமாணவாதங்கள் அஸமஞ்ஜஸம். அநுமாநத்தைக்கொண்டு ஶப்தப்ரமாணத்தை உபேக்ஷிப்பது பொருந்தாது. கோயிலண்ணன் இன்னாரிடத்திலே ஸ்ரீபாஷ்யம் கேட்டார் எனபதற்குப் பூர்வபக்ஷியே ஒரு ப்ராமாணிக க்ரந்தஸம்வாதம் காட்டியிருந்தால் அழகாயிருக்கும். எறும்பியப்பாவிடத்தில் கேட்டிருக்கலாமே, வேடலப்பையிடத்தில் கேட்டிருக்கலாமே என்றிப்படிப்பட்ட குதர்க்கவாதங்களுக்கு நாம் என்ன விடையளிப்பது? கோயிலண்ணனையேதான் கேட்டுத் தெளியவேண்டும். அல்லது மணவாளமாமுனிகளையாவது கேட்க.

32. இதர ஸம்ப்ரதாயஸ்தர்களிடமிருந்து வந்து சேர்ந்த அண்ணாவினிடத்திலே காலக்ஷேபம் கேட்கும்படி கோயிலண்ணனை மணவாளமாமுனிகள் நியமிப்பரோ வென்று சங்கிப்பதும் உசிதம். இப்போதுள்ள அனந்தாண்பிள்ளையாருக்குக் கூடஸ்தரான அனந்தாழ்வான் எம்பெருமானாரிடத்திலே ஆச்ரயிக்க எழுந்தருளினாரென்றும், எம்பெருமானார் அந்த அனந்தாழ்வானை அருளாளப்பெருமாளெம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்து அவரைக்கொண்டே திருவிலச்சினை முதலியன செய்வித்தருளினாரென்றும் ப்ரஸித்தமாகவுள்ளது. இது அந்தத் திருவம்சஸ்தர்

களும் நிர்விவாதமாக வெளியிட்டுக்கொண்டிருக்கும் விஷயம். அருளாளப்பெருமாளெம்பெருமானா ரென்பவர் அத்வைதியாயிருந்த [யஜ்ஞமூர்த்தி யென்னும் திருநாமத்தோடு கூடிய] உதாஹரணஸ்தர். இவர் உடையவரால் திருத்திப் பணிகொள்ளப்பட்டவர். இப்படிப்பட்டவரிடத்திலே அனந்தாழ்வானை உடையவர் எதுக்கு ஆச்ரயிப்பிக்க வேணுமென்று கேள்வி பிறந்தால் பூர்வபக்ஷிதாமும் என் சொல்லவல்லார்? 'பூர்வாசார்யர்களின் திருவுள்ளம் மிகவும் விசாலமானது' என்பதொன்றே இவ்வரலாறுகளினால் அறுதியிடலாகுமத்தனைபோக்கி, வரலாறு அஸங்கதமென்று வாய்திறக்கவு மொண்ணாது. இப்படிப்பட்ட ஸர்வஸம்ப்ரதிபந்ந த்ருஷ்டாந்தங்கள் பூர்வபக்ஷித்ருஷ்ட்யா பலபல வுள்ளன.

33. * செய்யதாமரைத் தாளிணை வாழியே இத்யாதியான வாழித் திருநாமம் அண்ணா அருளிச்செய்ததென்று அண்ணாவைபவ நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதையும் பூர்வபக்ஷி ஆக்ஷேபிக்கின்றார். நாலாயிர திவ்யப்ரபந்தமும் நித்யாநுஸந்தானமும் நூறு வருஷகாலமாகப் பல பதிப்புகள் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவற்றில் அந்த வாழித்திருநாமத்தின் தலைமேல் "பிரதிவாதிபயங்கரம் அண்ணா அருளிச்செய்தது" என்று முன்னோர்கள் பலரும் மகுடம் புனைந்திருப்பதை இன்றைக்கும் காணலாம். ஆகவே இதுவும் முன்னோர் மொழிந்த முறை தப்பாமற் பணித்ததேயாம். தனியன்களில் கர்த்ருநாமவிஷயவிஸம்வாதங்கள் பலபலவுண்டு. இதில் ஒருதலையான ஸுநிஶ்சய முடையோமல்லோம். இது மிகவும் சிறிய விஷயம், வாழித்திருநாமம் அண்ணா அருளிச்செய்ததன்று என்கிற பூர்வபக்ஷியின் பக்ஷமே யுக்தமாயினுமாகுக. இதனால் ப்ரதாந ப்ரமேயத்திற்கு ப்ரதோஷமொன்றும் விளையாது. எத்தனையோ பெரிய க்ரந்தங்களைப்பற்றியே கர்த்ருவிஷயவிஸம்வாதங்கள் தொன்றுதொட்டே நிகழ்ந்திருக்கக் காண்கிறோம். தேசிகனுடைய அதிகரண ஸாராவளியில் "வ்ருத்திர்த்ருஷ்டேதா ஜைமிநீ ப்ராவாரவிததயா போதாயநாயப்ராவாத்ர ஸங்கர்ஷம் காஶக்ருத்ஸ்நப்ரஹவஜதி கதம் தத்வரத்நாகரோக்தி:" என்று பூர்வபக்ஷம் செய்துகொள்ளப்பட்டு உத்தரவாக்யத்தில் ஸமாதானமுரைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அந்த ஸமாதானமே இங்கும் பொருந்துமென்று பூர்வபக்ஷி தெளியக் கடவர்.

34. "அண்ணாவுக்கு நயினாராசார்யரிடத்திலும் மணவாளமாமுனிகளிடத்திலுமுள்ள ஸம்பந்த விமர்சம்" என்று மகுடமிட்டுப் பூர்வபக்ஷி (பக்கம் 9 ல்) நிகமநம் செய்திருப்பது ஆஶ்சர்யஜநகம். "கீழ்ப்பண்ணின உபபாதனங்களால் அண்ணாவுக்கு நயினாராசார்யர் ஸம்பந்தம் தவிர மணவாளமாமுனிகளின் ஸம்பந்தம் இல்லையென்பது ஸுஸ்பஷ்டம்" என்று பூர்வபக்ஷி முடிவுகட்டுகிறார். இவர் கீழ்ப்பண்ணின உபபாதனம் என்ன? ஏதேனும் ஒரு ப்ரமாணமாவது இவர் காட்டியிருக்கின்றாரோ? அச்சுப் பதிப்பில் அண்ணாவின் திருவவதாரஸம்வத்ஸரநிர்தேஶத்தில் ஒரு லக்ஷம் புரண்டு விழுந்திருக்கின்றதென்கிற ஒன்றுதவிர வேறு ஒரு ஆதாரமாவது இவர்க்குண்டோ? உடையவருடைய சரித்திரமெழுதப்புகுந்த வொருவர் அவருடைய திருவவதார வருஷத்தை அநவதாநத்தினால் முன்னே தள்ளியோ பின்னே தள்ளியோ எழுதி வெளியிட்டிருப்பாராயின் அந்த வெளியீடுதன்னையே கொண்டு, நாதமுனிகளுக்கு முன்னமே உடையவர்காலமாய்விட்டதென்றுவது, மணவாளமாமுனிகளுக்குப் பிறகுதான் உடையவர் திருவவதாரமென்றுவது ஒருவர் எழுதினால் அவருடைய புத்திக்கு என்ன மதிப்புத் தரலாமோ அந்த மதிப்பே இந்தப் பூர்வபக்ஷியின் புத்திக்கும் தானுரியதாம். உண்மையில் இவர் விவேகியாயிருந்தால் "அண்ணா வைபவத்தில் அண்ணாவின் திருவவதாரத்திற்கும் பரமபத யாத்திரைக்கும் நிர்தேஶித்திருக்கிற ஸம்வத்ஸரஸங்க்யை பிசகாக விழுந்திருக்கின்றது; அதனை ஒழுங்குபடுத்தவேணும்" என்கிற இவ்வளவு உத்யோஜநம் செய்திருக்கவே ப்ராப்தம். இவருடைய உத்யோஜநமின்றியே பிழைதிருத்தத்தில் அதுவும் ஒழுங்குபடுத்தப்பட்டுவிட்டபடியால் இவருடைய துஸ்ஸாஹஸவிஜ்ரும்பிதங்களுக்கு இங்கு எள்ளளவும் அவகாசமில்லை.

35. கல்யப்தம்4463ல் அண்ணா திருவவதாரமென்றால் ஜோதிஷ சாஸ்திரம் இடங்கொடாதென்றும் ஜோதிஷர்கள் பரிஹஸிக்கவும் நேருமென்றும் [illegible] இவர் எழுதியிருப்பது விரைவில் ஒரு மஹாஸபையில் பரிசீலனைக்கு வரவேண்டும். சோதிடர்கள் மலிந்திருக்கப்பெற்ற இவ்வுலகில் இந்த வுண்மை நன்கு வெளிவரக்கூடியதேயாம், அவசியம் வெளிவரவேணும். ஸ்வயம்வரமாகப் பல சோதிடர்களை நாம் பரிச்ரமப்

படுத்தி இதில் எவ்வளவு பரிசீலனைகள் செய்யவேணுமோ அவ்வளவும் செய்துகொண்டோமாதலால் இவருடைய விஜிஜ்ஞாஸைக்கு ஸந்தேஹாஸ்பதவிஷயமாகக் கடவது. இங்கு விசேஷித்து அர்த்தாம்சங்களை ஸமுசிதஸமயத்தில் வெளியிடுவோம்.

36. அண்ணாவைபவத்தில் மணவாளமாமுனிகளுக்கு அண்ணா முன்னின்று பாத கைங்கரியங்கள் நடத்தியருளினாரென்று எழுதியிருப்பதில்பூர்வபக்ஷி மிக்கபொருமையைவெளியிடுகிறார். வஸ்துதஃ எந்த ஆசிரியர் மணவாளமாமுனிகளுக்கு பாதசுச்ரூஷைகளைச் செய்ததாகப் பூர்வபக்ஷி எண்ணுவாரோ அந்த ஆசிரியரே அவற்றைச் செய்ததாக நாமும் இசைகின்றோம். ஆசார்யனுடைய பாத கைங்கர்யங்களில் சிஷ்யர்களெல்லார்க்கும் அதிகாராநுஸரணம் அநுஷ்டேயம் அநுபவாயமாதலால் அவ்வளவே அண்ணா வைபவத்தில் எழுதப்பட்டுள்ளது. * க்ரியா ஸகாலபூர்வஸ்ய ஸுச்ரூஷா சிஷ்யஸ்ஸஸம்ஸ்ய ஸர்வேஷாம் ஸமாநாதவாஞா: * என்றிறே ஆசார்ய சர்யாம்ருதத்தில் ஸ்ரீஜகத்குருஸ்வாமி அருளிச்செய்துள்ளது. இதில் பொருமைக்குச் சிறிதேனு மிடமுண்டோ?

37. "அண்ணாவுக்கும் லோகாசார்டருக்கும் உள்ள ஸம்பந்த விமர்சம்" என்ற தலைப்பின்கீழ்ப் பூர்வபக்ஷி எழுதியுள்ள ஆக்ஷேபங்களுக்குச் சுருக்கமாக விடையளிப்போம். "காஞ்சீபுரத்தில் அண்ணா விக்ரஹ ப்ரதிஷ்டை ப்ரோக்ஷணகாலத்தில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமியால் பத்திரிகை ஒன்று வெளியிடப்பட்டிருப்பதாக" உபக்ரமித்திருப்பது மஹா மோஹகார்யம். ஸ்ரீகாஞ்சியில் அண்ணா விக்ரஹ ப்ரதிஷ்டை நடைபெற்றுப் பலபலவருஷங்களுக்கு மேலாகிறது. அந்த காலத்தில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமி யாதொரு பத்ரிகையும் வெளியிட்டருள ப்ரஸக்திதானுமில்லை. வேறொரு ப்ரகரணத்தில் பத்ரிகை வெளியிட்டருளி யிருப்பதுண்டு. அதில், அண்ணா பிள்ளைலோகாசார்யருடைய திருவம்சத்தில் திருவவதரித்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாம். இவ்விஷயம் அண்ணா வைபவத்திலேயே விரிவாக எழுதப்பட்டிருக்கும்போது ஸாதாரண விளம்பரப் பத்திரிகையைப்பற்றின ப்ரஸங்கம் எதுக்கு? இதுநிற்க.

38. எம்பெருமானார் நியமித்தருளின எழுபத்திநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளுள் ஒருவரும், வடக்குத்திருவீதிப்பிள்ளை பிள்ளைலோகாசார்யர் முதலான ஆசார்யர்கட்குக் குலகூடஸ்தருமான முடும்பைநம்பியின் திருவம்சத்தில் திருவவதரித்தவரான அநந்தாசார்யர் ஸ்வாமிக்குத் திருக்குமாரராக அண்ணா அவதரித்தருளினார் என்று அண்ணா வைபவ நூல்களில் எழுதப்பட்டுள்ளது. இவ்விதமாகவே பரம்பரையாகத் தனியன்கள் எங்களுக்கு அநுஸந்தானத்தில் வந்திருக்கிறபடியாலும், வம்சாவளீ வம்சவ்ருக்ஷங்களும் அப்படியே விளங்குவதாலும் இவற்றையெல்லாம் அடியொற்றி முடும்பைநம்பியின் திருவம்சமென்று எழுதப்பட்டது. இதனை அஸத்யமாக்ஷரிக்கப் பூர்வபக்ஷிக்கு யாதொரு ப்ரமாணமுமில்லை. அண்ணா பிள்ளைலோகாசார்யருடைய திருவம்சஸ்தராயிருந்தால் அவருடைய திருத்தகப்பனார் ஸஹோதரர்களைப்போலே ஸ்ரீரங்கத்தில் வாழவேண்டியிருக்கக் காஞ்சியில் வாழக் காரணமில்லையென்கிறார் பூர்வபக்ஷி. நம்முடைய ஆசார்யர்களில் பலர் அவதரித்தது ஓரிடத்திலும் நித்யவாஸஞ் செய்தது மற்றோரிடத்திலுமாக இருப்பது ஸர்வஸம்ப்ரதிபந்நம். ஒருத்தருடைய ஸந்ததியார் நாற்றிசையிலும் பரவியிருக்கக் காணுகின்றோம். ஆகையால் இது உபேக்ஷ்யம். அஸத்யாபவாதமத்தனை.

39. லோகாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களான ஆசார்யர்கள் பக்கலில் அண்ணா ஆச்ரயியாமல் தத்ஸம்ப்ரதாய ப்ரதித்வந்த்வியான வேதாந்த தேசிகனுடைய திருக்குமாரரிடத்து ஆச்ரயிப்பானேன்? என்று கேட்கப்படுகிறது. அத்ரோச்யதே. அண்ணா அவதரித்தது தூப்புலில். நயனாசார்யர் அங்கே ஸந்நிக்ருஷ்டராக எழுந்தருளியிருந்தார். அப்போது அவ்விடத்தில் பிள்ளைலோகாசார்யருடைய சிஷ்யபரம்பரையினர் எவருமில்லை. அன்றியும், இக்காலத்திற்போல் அக்காலத்தில் அவ்வளவு வைஷம்யம் பாராட்டப்பட்டிருக்கவில்லை. எம்பெருமானார் விப்ரக்ருஷ்டதேசஸ்தரான யாதவப்ரகாசரிடத்திலே வேதாந்த மதிகரித்தாரென்பதை இதிஹாஸங்களில் நாம் வாசித்து வருகிறோம். அக்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ஸாமஞ்ஜஸ்யராய் * ஸிம்ஹாஸந சாஸ்த்ரார்த்தவிசாரகா த்ரீந்தாம் சாஸ்த்ரவேதந்: *

என்று பேசப்பெற்றவராய் * ப்ரதிவாதிவாரண ப்ரகடாடோபவிபாடநக்ஷமரான ஆளவந்தார் ஸகலவிதயோக்யதைகளாலும் பரிபூர்ணராய் எழுந்தருளியிருக்கச் செய்தேயும் அவர் திருவடிகளில் சென்று ஆச்ரயிக்கப் பெறாமல் மாயாவாதியினிடத்திலே வித்யாப்யாஸத்தையும் பண்ணிக்கொண்டு உடையவர் ஏன் பணித்திருந்தார்? அப்படிப்பட்ட ஆளவந்தார் நேரே பெருமாள்கோயிலேற எழுந்தருளியிருக்கச்செய்தேயும் உடையவர் அவரை அணுகாமல் மாயாவாதியினிடத்திலேயே மண்டிக்கிடந்தாரென்றும் வரலாறு உள்ளதன்றோ? இத்தகைய இதிஹாஸங்களால் இந்த பூர்வபக்ஷி வேண்டியவளவு ஆதோஷங்கள் செய்யலாமே. * கப்யாஸச்ருதிக்கு அத்யந்தாஸமஞ்ஜஸமான பொருளை யாதவப்ரகாசர் சொல்லக்கேட்டுக் கண்ணீர் பெருகவிட்டதென்பும் உடையவர் அவரிடத்தே வேதாந்த மதிகரித்ததாக இதிஹாஸமிராநின்றதே. அப்படிப்பட்ட உதாரரல்லரோ நயினாசார்யர். * ஶ்ரீ [illegible] விஜயத்வஜமென்று போற்றப்பட்டவராகத்தானே விளங்கினாவர். சில யோஜநாபேதங்களால் க்ரந்தங்களில் ஸூக்ஷ்மவைஷம்யமிருந்ததென்பதை நாம் அபலபிக்கவில்லை. அதனாலென்ன? அதிக வைஷம்யம் முற்றியிருக்குமிக்காலத்திலுமே தென்கலையாரிடத்தில் வடகலையாரும் வடகலையாரிடத்தில் தென்கலையாரும் ஶ்ரீபாஷ்யாதி க்ரந்தகாலக்ஷேபம் நடத்தக் காணாநின்றோம். வாக்கலஹமுமின்றி வைஷம்யவாஸனையையே யறியாத முற்காலத்தில் நிஸ்ஸங்கமாகவே நடந்திருப்பதில் என்ன தோஷமேறும்?

40. வேதாந்ததேசிகனுடைய க்ரந்தங்களுள் ரஹஸ்யத்ரயஸாரமென்பது முக்கியமாக லோகாசார்ய திவ்யக்ரந்தப்ரதித்வந்த்வியானது. அப்படிப்பட்ட ரஹஸ்யத்ரய ஸாரத்திலிருந்தும் பல வாக்கியங்களை மணவாளமாமுனிகள் அபியுக்தோக்தியாகத் தமது ரஹஸ்யவ்யாக்யாநங்களில் பலவிடங்களில் உதாஹரித்தருளியிருக்கக் காணாநின்றோம். நயனாசார்யர் பணித்த சில காரிகைகளையும் தத்வத்ரயவ்யாக்யாநத்தில் உதாஹரித்திருக்கக் காண்கிறோம். பூர்வபக்ஷிக்கு இவை தெரியா.

41. வேதாந்ததேசிகனும் நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளைகளின் ஶ்ரீஸூக்திகளைச் சேமவைப்பாக ஸேவித்து ஆதரித்தருளிப் போந்தாரென்பது ஸஸாக்ஷிகமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு வைமநஸ்யத்தினிடையே ஸூக்ஷ்ம நிர்வாஹபேதங்களிருந்தன வென்பதற்காக 'அண்ணா நயினாசார்யரை வெறுத்திருக்கவேணும்'மென்பது கேவலம் துராக்ரஹிகளின் பேச்சேயாகும். பூர்வபக்ஷி நினைக்கிறபடி வேதாந்ததேசிக ஸம்பந்தம் அவத்யாவஹமானால் வடகலையாருடைய ஸம்பந்தகந்தமுமில்லாத பலபல திருப்பதிகளில் அவருடைய விக்ரஹம் தொன்றுதொட்டு ஆராதிக்கப்பட்டு வருவது பொருந்தாது. திருவவதார ஸ்தலமான தூப்புலிலும் தேசிகனைத் தென்கலை ஸம்ப்ரதாயஸ்தர்களே நெடுநாளாகச் சேமித்து வந்திருக்கிறார்களென்பது நாடறிந்தது. இவைபோல்வன விஷயங்களை இங்கு விரிப்பிற் பெருகும். ஸம்ப்ரதாய ஸாரஸ்யமென்கிற க்ரந்தத்திலே மிக விரித்துரைத்தோம் அங்குக் கண்டுகொள்வது. அண்ணா நயினாசார்யரிடத்தில் வேதாந்த ச்ரவணம் பண்ணினதைப்பற்றிப் பூர்வபக்ஷி உதார[illegible] - [illegible]ணம்போல் எழுதியிருந்தபடியால் அக்காலத்தில் அது ஸஹஜமாகவே நடந்துகொண்டிருந்த ஆசாரந்தான் என்பதை மாத்திரம் இங்குக்காட்டுவோம்.

42. அண்ணா நயினாசார்யரிடத்தில் வேதாந்த மதிகரித்தாரென்றால் வேதாந்ததேசிக ஸம்ப்ராதாயத்திற்கே யன்றோ ஏற்றம் விளங்கிவிடும் என்கிற அபிப்ராயத்துடன் பூர்வபக்ஷி ஏதேதோ எழுதுகிறார். வைதாந்திக ஸம்ப்ரதாயார்ய க்ரஹணமென்பது ரஹஸ்யப்ரஸ்தாநத்திலும் ஸர்வவிஷயப்ரஸ்தாநத்திலுமேயுள்ளது. அப்படிப்பட்ட வைதாந்திக க்ரந்தங்களை அண்ணா நயினாசார்யரிடத்தில் அதிகரித்ததாக அண்ணா வைபவத்தில் ஓரெழுத்துமில்லை. அங்கே ஶ்ரீபாஷ்யகாலக்ஷேபம் செய்தாரென்றவளவால் ஒரு குறையும் வாராது.

43. நாமெல்லாருமறிய ஸமீபகாலத்தில் குன்றபாக்கம். திருமலை அனந்தாண்பிள்ளை, ஶ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி யென்கிற விச்வப்ரஸித்த வித்வச்சிரோமணி காஞ்சியில் எழுந்தருளியிருந்தார்.

இவர் நிஷ்க்ருஷ்ட தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தரென்பது உலகறிந்ததே. இந்த ஸ்வாமி ஸ்ரீபாஷ்யார்த்த ப்ரகாசகமாக தத்வரத்னாவளீ என்றொரு க்ரந்தமருளிச்செய்து வெளியிட்டிருக்கிறார். அதில் [வியாக்கியானத்தில்] வைகானஸ ஸம்ப்ரதாய விஷயத்தில் தேசிகனுடைய உக்திகள் சிலவற்றை ப்ரத்யாக்யானம் செய்து எழுதி யிருக்கிறாரென்பதும் உள்ளது. இப்படிப்பட்ட ஸ்வாமி அந்த தத்வரத்னாவளியில் * ஜயதி ஸஹ வாது வேதாந்தாசார்யஸ்ஸ தார்க்கிககேஸரீ த்யாதியான ஒரு ச்லோகத்தால் தேசிகனை உபச்லோகித்திருக்கிறார். இந்த ஸ்வாமிக்கு முற்பட்ட பல தென்னாசார்யர்களும் இங்ஙனே பலபல ச்லோகங்களெழுதியுள்ளார்கள். ப்ரபாராயணத்தில் தேசிகனை ஆராதித்துவருகிற குடும்பமும் தென்னாசார்யர்களிலுள்ளது. கிம் பஹுநா? * ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: என்கிற தேசிகன் தனியனை [ஸமவா, 'ஶ்ருதப்ரகாஶிகாஸூரௌ... வேங்கடேஶம் ஸமாஶ்ரிதே என்ற தனியனை] உபகாரகசேஷநாயிவா அநுஸந்தித்துவாராத தென்கலையார்கள் குருத்ரோஹியாவர். ஆக இப்படிப்பட்ட விஷயங்களால் தென்னாசார்ய ஸம்பிரதாயத்திற்கு ஒரு தாழ்வு விளைந்துவிட்டதாக இன்றளவும் ஒரு விவேகியும் நினைத்ததில்லை. 'இக்காலத்தில் வடகலையார்களென்றுள்ளவர்கள் கொண்டிருக்கிற கொள்கைகளெல்லாம் தேசிகனுகந்தவையல்ல' என்கிற ஸாராம்ஶத்தை நாம் பலகாலும் பன்னியுரைத்திருக்கின்றோம். ஆதலால் அண்ணா தேசிகன் திருக்குமாரரிடத்தில் அந்வயித்தாரென்பது ஒருகாலும் அஸத்யமாகாது.

44. லோகாசார்ய ஸம்ப்ரதாயத்தில் அவதரித்தவரான அண்ணா தேசிக ஸம்ப்ரதாயத்தில் அந்வயித்ததனால் அண்ணாவுக்கு லோகாசார்ய ஸம்ப்ரதாயத்தில் அதுஷ்டியுண்டாயிருந்ததாக விளங்குமென்கிற வார்த்தை ஒவ்வாது. திருமலைநம்பியின் விசேஷ கடாக்ஷத்திற்குப்பாத்ரபூதர்களான எம்பெருமானாரும் எம்பாரும் அந்த நம்பியைவிட்டு அந்யத்ர வேதாந்தக்ரந்தங்கள் பயின்றதனால் திருமலைநம்பி ஸம்பிரதாயத்தில் அவர்கட்கு அதுஷ்டியுண்டாயிருந்ததென்னும் பூர்வபக்ஷி இசையவேண்டியதாகும்.

